**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 35/2020** **Date:12.03.2026.**

**(DW2)- அருள்பிரசாத்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. பிரதிவாதிக்கு தாவா சொத்து எவ்வாறு கிடைத்துள்ளது என்றால் தெரியாது. வாதியின் சொத்தும் பிரதிவாதியின் சொத்தும் பூர்வீகமாக ஒரே சொத்தாக இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்து ஒரே சொத்தாக இருந்தபோது வாதியும் பிரதிவாதியும் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை யார் கூறியது என்றால் நான் கூற வழக்கறிஞர் தாக்கல் செய்தார். நான் இந்த வழக்கு குறித்த முழு விபரங்களும் எனக்கு தெரியும் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுவிட்டு தற்போது எந்த விபரமும் தெரியாது என்று கூறுவதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றாலும் நான் பொய்யான சங்கதிகளை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது சாட்சியம் எற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**,

இரணியல்.